# செயலாற்றுகை அறிக்கை – 2017

## தேசிய திட்டமிடல் திணைக்களம்


1 திணைக்களத்தின் தூரநோக்கு, பணிக் கூற்று, தொழிற்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள்

2. திணைக்களத்தின் பிரிவுகள் மற்றும் துறைகள்

3. துறை வாரியான செயலாற்றுகை

3.1 விவசாயம் நீர்ப்பாசனம் பெருந்தோட்டம், கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்பிடி

3.2 மின்சாரம் மற்றும் சக்தி வளத்துறை

3.3 வீதிகள், துறைமுகங்கள் மற்றும் போக்குவரத்து

3.4 வீடமைப்பு, நகர அபிவிருத்தி, நீர் வளம் மற்றும் சுற்றாடல்

3.5 கைத்தொழில்கள், வர்த்தகம் உல்லாசப் பயணத்துறை தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு

3.6 சுகாதாரம், கலை, தேசிய நல்லிணக்கம், விளையாட்டு மற்றும் சுதேச வைத்தியம்

3.7 கல்வி, உயர் கல்வி மற்றும் திறன் அபிவிருத்தி, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம்

3.8 பேரண்ட பொருளாதார திட்டமிடல்

3.9 பிரதேச அபிவிருத்தி மற்றும் சமூக பாதுகாப்பு

3.10 பொது முகாமைத்துவம் மற்றும் ஆட்சி

4. தகவல் அபிவிருத்திக்கான மத்திய நிலையம்

5. மனித வள அபிவிருத்தி மற்றும் பொது நிர்வாகம்

6. நிதிச் செயலாற்றுகை

## 1. திணைக்களத்தின் தூரநோக்கு, பணிக்கூற்று, தொழிற்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள்

**தூர நோக்கு**
நாட்டின் அபிவிருத்தியில் ஆலோசகராகவும் வசதியளிப்பவராகவும் இருத்தல்.

**பணிக்கூற்று**

நாட்டில் காணப்படும் வரையறுக்கப்பட்ட மூலவளங்களினூடாக உச்ச பயனைப் பெறக்கூடிய வகையில் சிறப்பான திட்டமிடல் அணுகுமுறைகளைப் பின்பற்றி கொள்கை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை உருவாக்குவதில் உயர்ந்தபட்ச தொழில் வல்லமையை பேணும் வகையில் சர்வதேச தரத்திலான திட்டமிடல் திறன்களை தொடர்ச்சியாக மேம்படுத்துதல்.

**பிரதான தொழிற்பாடுகள்**

- தேசிய மற்றும் பிராந்திய கொள்கைகளை வகுப்பதில் செயற்பாடுகளை முன்னெடுத்தல்
- நீண்டகால, நடுத்தர கால அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்தல் : பொது முதலீட்டு நிகழ்ச்சித் திட்டங்கள்
- வரிசை நிறுவகங்களினால் சமர்ப்பிக்கப்படும் கருத்திட்டங்களை மதிப்பீடு செய்தல்
- அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அவதானிப்புகளை வழங்குதல்
- கருத்திட்ட முன்மொழிவு இருப்பை தயாரித்தல் மற்றும் மேம்படுத்தல்
- திட்டமிடலுக்கான வழிகாட்டல்களைத் தயாரித்தல்
- பிராந்திய மட்ட அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பதற்கான உள்ளீட்டல்களை வழங்குதல்
- பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்களின் திட்ட முன்மொழிவுகளை அங்கீகரித்தல்
- கொள்கை அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் தொடர்பில் திணைக்களத்திற்கு சாட்டப்படும் விசேட செயன்முறைகளை அமுல்படுத்தல்
- ஊழியர்களின் திறன் அபிவிருத்தி செயற்பாடுகள்
- பொது நிர்வாகம்

## 2. திணைக்களத்தின் பிரிவுகள் மற்றும் துறைகள்

திணைக்களத்தின் தொழிற்பாடுகளை மிகவும் சிறப்பாக கொண்டு நடாத்துவதற்காக திணைக்களமானது 9 துறைகளாக பிரிக்கப்பட்டுள்ளதோடு அத்துறைகள் மேலும் 31 உப பிரிவுகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளதோடு அது பொருளாதார அபிவிருத்தியின் அனைத்து

பகுதிகளையும் உள்ளடக்கியுள்ளது. ஒவ்வொரு துறையும் அதன் கீழ் காணப்படும் நிரல் அமைச்சுக்கள் தொடர்பான கொள்கை உருவாக்கம், திட்டங்களை தயாரித்தல், மற்றும் ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகளை தயாரித்தல் என்பவற்றிற்கு பொறுப்பாக உள்ளது.

துறைகள்

1) பேரண்ட பொருளாதார அபிவிருத்தி
2) விவசாயம், நீர்ப்பாசனம், காணி, கால்நடை மற்றும் மீன்பிடி
3) கைத்தொழில்கள், வர்த்தகம், சுற்றுலாத் துறை,மின்சாரம் மற்றும் சக்தி வளத்துறை
4) வீதிகள், துறைமுகங்கள் மற்றும் போக்குவரத்து
5) வீடமைப்பு, நகர அபிவிருத்தி, நீர் விநியோகம் மற்றும் சுற்றாடல்
6) கல்வி, உயர் கல்வி தகவல் தொடர்பு, தொலைத் தொடர்பு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம்
7) சுகாதாரம், சுதேச வைத்தியம் மற்றும் விளையாட்டு
8) பிராந்திய அபிவிருத்தி மற்றும் சமூக பாதுகாப்பு
9) பொது முகாமைத்துவம் மற்றும் ஆட்சி
10) பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம்

இதற்கு மேலதிகமாக தகவல்களை பரிமாற்றம் செய்தல், நிர்வாகம், கணக்காய்வு என்பவற்றிற்காக மேலும் மூன்று வெவ்வேறான பிரிவுகள் காணப்படுகின்றன.

i. தகவல் அபிவிருத்திக்கான மத்திய நிலையம்
ii. நிர்வாகப் பிரிவு
iii. நிதிப் பிரிவு

# 3. துறைவாரியான செயலாற்றுகை

## 3.1 பேரண்ட பொருளாதார அபிவிருத்தி

2016 இல் இலங்கை ஆனது தலா வருமானம் 3,835 ஐக்கிய அமெரிக்க டொலர்களைக் கொண்டதும் நடுத்தர வருமானத்தை உடையதுமான ஒரு நாடாகும். 2017 ஆம் ஆண்டில் முதல் ஒன்பது மாதங்களுக்குமான இலங்கைப் பொருளாதாரத்தின் சராசரி வளர்ச்சி வீதமானது 3.7 சத வீதமாகவும் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் காலாண்டுகளில் முறையே 3.8 4.0 மற்றும் 3.3 சத வீதங்களும் காணப்பட்டது. கடந்த 24 மாதக் காலப் பகுதியில் காணப்பட்ட கடும் மழை மற்றும் கடும் வரட்சி ஆகியவையே இவ்வாறான மந்த வளர்ச்சி வீதத்திற்கு காரணங்களாகும். 63 ஆண்டுகளுக்குப் பின்னர் 2017 ஆம் ஆண்டில் இலங்கையின் அரச வருமான செலவினத்தில் ஆரம்ப மீதி 21.9 பில்லியன் ரூபா மிகையாகப் பதிவாகி உள்ளது. 2017 ஆம் ஆண்டு புரட்டாதி மாதத்தின் இறுதிப்பகுதியில் சென்மதி நிலுவையின் மொத்த மிகை 2.0 பில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களாகும். 2016 ஆம் ஆண்டு இறுதிப்பகுதியில் மொத்த

அதிகார பூர்வ இருப்பு 6.0 பில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களாக காணப்பட்டதுடன் இதுவும் 7.3 பில்லியன் (4.2 மாதங்களுக்கான இறக்குமதிக்குச் சமமான தொகை) ஐக்கிய அமெரிக்க டொலர்களாக அதிகரித்து உள்ளது. அவ்வாறே வர்த்தக மீதியானது 2017 ஆம் ஆண்டு தை மாதத்திலிருந்து புரட்டாதி மாதம் வரையிலான காலப் பகுதியில் -8,590.6 ஐக்கிய அமெரிக்க டொலர்கள் ஆகும். மேலும், ஏற்றுமதி ஆனது இரட்டை இலக்க வளர்ச்சி வீதமானது 2016 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் வரை தொடர்ந்தும் ஐந்து மாதங்களாக பதிவாகியுள்ளது. 2017 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் கணிசமான அளவு இறக்குமதிக்கான செலவீனம் அதிகரித்துள்ளது. இதற்கிடையில் இலங்கையானது மனித வள அபிவிருத்தியில் கணிசமான அளவு முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. பிரதேசங்களுக்கிடையில் வேறுபாடு (ஏற்றத்தாழ்வு) காணப்பட்ட போதிலும் தேசிய தலைக்குரிய வறுமைச் சுட்டி விகிதம் 2012/2013 இல் 6.7 சத வீதமாக பதிவாகியதுடன் இது 2015/2016 இல் 4.1 சத வீதமாகக் குறைந்துள்ளது. துறைகளுக்கிடையேயான தலைக்குரிய வறுமைச் சுட்டி விகிதத்தினை ஒப்பிடும் பொழுது பெருந்தோட்டத்துறையானது ஏனைய இரண்டு துறைகளையும் பார்க்கிலும் மிகவும் உயர்வான வறுமைச் சுட்டி விகிதம் (8.8 சத வீதம்) பதிவாகியுள்ளது. மாவட்டங்களுக்கு இடையேயான தலைக்குரிய வறுமைச் சுட்டி விகிதம் கிளிநொச்சி மாவட்டத்தில் மிகவும் உயர்வாகவும் (18.22 சத வீதம்) கொழும்பு மாவட்டத்தில் மிகவும் குறைவாகவும் (0.9 சத வீதம்) அறிக்கையிடப்பட்டுள்ளது.

## விசேட நிகழ்வுகள்

- நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் ஆண்டறிக்கைக்கான பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய அத்தியாயம் தயாரிக்கப்பட்டது.
- நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளிற்கான அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன.
- 2017 ஆம் ஆண்டு வைகாசி மாதம் வெள்ளம் மற்றும் மண்சரிவு ஆகியவற்றினால் பாதிக்கப்பட்ட 14 மாவட்டங்களிற்கான "அனர்த்தத்திற்குப் பின்னரான மீளமைப்பு மற்றும் மீள் நிர்மாணத்திற்கான திட்டம்" தயாரிக்கப்பட்டது. இத்திட்டத்தினைத் தயாரிப்பதற்காக பிரதேச செயலகங்கள் ஊடாக துறை ரீதியிலான தரவுகள் சேகரிக்கப்பட்டன.
- வறுமை வீதம் உயர்வாகவும் 2017 ஆம் ஆண்டு வைகாசி மாதம் வெள்ளம் மற்றும் மண்சரிவு ஆகியவற்றினால் பாதிக்கப்பட்டதுமான 7 தேர்தல் தொகுதிகளில் உள்ள களுத்துறை, இரத்தினபுரி, காலி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கான "விசேட ஒருங்கிணைக்கப்பட்ட சிங்கராச கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்" தயாரிப்பதற்கான ஆரம்ப வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டன. தொடர்புடைய 15 பிரதேச செயலகங்களில் அதிகாரிகள் மற்றும் கள உத்தியோகத்தர்கள் ஆகியோரினைத் தெளிவு படுத்துவதற்கான கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

## 3.2 விவசாயம், நீர்ப்பாசனம், பெருந்தோட்டத்துறை, கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்பிடி

### விவசாயம்

விவசாயத் துறையானது கடந்த 1990 களில் 26 சதவீதமாக இருந்த மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பங்களிக்கும் வீதம் 2015 இல் 7.9 சதவீதமாக குறைந்து செல்கின்ற போக்கு காணப்பட்டாலும் இத் துறையின் கட்டமைப்பானது பாரம்பரிய விவசாயப் பொருளாதாரத்திலிருந்து சேவை முதன்மைப்படுத்தப்பட்ட துறையாகப் பல மாற்றங்களைக் கண்டுள்ளது. இத் துறையானது நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகவே தொடர்ந்தும் திகழ்ந்து கொண்டிருக்கிறது. ஏனெனில் இத்துறையில் பெரும்பான்மையான (சுமார் 70 சதவீதமான) மக்கள் கிராமப்புறங்களில் மற்றும் மலையகங்களில் வாழ்வதாலும் அவர்கள் தமது வாழ்வாதாரமாக விவசாயத்தைக் கொண்டிருப்பதாலும் தொழில் வாய்ப்புகளை பெற்றுத் தருகின்ற துறையாக காணப்படுதலேயாகும். இத்துறையானது சுமார் 28.1 சதவீதமான வேலைப்படையினருக்கு வேலை வாய்ப்பை வழங்குவதுடன் மேலும் பல்வேறுபட்ட விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களை உருவாக்குவதற்கும் ஏனைய துறைகளுடன் நிலைக்குத்தான மற்றும் கிடையான ஒருங்கிணைப்பிற்கு தேவையான விவசாய சேவைகளை வழங்குவதற்கும் அதனூடாக பொருளாதார அபிவிருத்தியினை தூண்டுவதற்கும் பங்களிப்புச் செலுத்துகின்றது.

### பயிர் விவசாயம்

பயிர்ச்செய்கைவிவசாயமானது நெல் வேளாண்மை, காய்கறிகள், பழங்கள், ஏனைய வளர் பயிர்கள், ஏற்றுமதிப் பயிர்கள், சுவையூட்டிகள் என்பனவற்றுடன் நறுமண மலர் வளர்ப்பு, தாவர வளர்ப்பு மற்றும் பசுமை தாவர வளர்ப்பு என்பனவற்றையும் உள்ளடக்கியதாகும். நெல்லுற்பத்தியானது மிகவும் முக்கியமான பொருளாதார செயற்பாடாக இருப்பதுடன் ஒரு மில்லியனுக்கும் அதிகமான விவசாயிகளை நேரடியான வகையிலும் நேரடியற்ற வகையிலும் நெல்வேளாண்மைத்துறை கொண்டுள்ளது. 2017 ஆம் ஆண்டிற்கான விவசாய பயிர்ச்செய்கைக்கான மொத்த மூலதன முதலீடு சுமார் 14 பில்லியன்களாகும்.

### தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் விவசாய உப துறைப் பிரிவினால் பூரணப்படுத்தப்பட்ட செயற்பாடுகள்

- 39 கருத்திட்டங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளத் திணைக்களங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டன.

- விவசாய அமைச்சு மற்றும் பாரம்பரிய கைத்தொழில்கள் அமைச்சு என்பவற்றால் சமர்ப்பிக்கப்பட்ட 05 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் சார்பாக அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

**விசேட செயற்பாடுகள்:**

- களனி பல்கலைக்கழகத்துடன் இணைந்து வேளாண்மைத் துறைக்கான (நெல்) முகாமைத்துவ தகவல் முறைமை தயாரிக்கப்பட்டது.
- கழிவகற்றல் ஏற்பாடுகள் முறைமையில் வர்த்தக ரீதியிலான கண்டறியும் ஆய்வுக்குரியதும் மற்றும் தொழில்நுட்பத்தடைகள் என்பவற்றிற்கானதுமான செயலமர்வு ஒழுங்கு செய்யப்பட்டது.
- தென் பிராந்திய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கான விவசாயப்பிரிவிற்குரிய அத்தியாயம் தயாரிக்கப்பட்டது.
- நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் இலக்கம் 2 (பசி, பட்டினிகளை முடிவிற்கு கொண்டு வருதல், பாதுகாப்பான உணவு கிடைத்தல், ஊட்டச்சத்துடனான போசாக்கான உணவு கிடைப்பதற்குரிய நிலைபேறான விவசாயத்தினை முன்னேற்றுதல்) இற்கான உபாயங்கள், தேசிய குறிகாட்டிகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் நிதி ஒதுக்கீடுகளுடன் தொடர்புடைய அடைவுகள் என்பவற்றை உள்ளடக்கிய அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன.
- விவசாய ஆராய்ச்சிக் கொள்கைக்கான சபையினால் ஒழுங்கு செய்யப்பட்ட ‘‘விவசாயத்துறைக்கான கொள்கை ஆய்வு’’ இற்கான குழுக் கூட்டங்களில் பங்கு பற்றியமை.

**கால்நடைகள்**

கால்நடைத் துறையானது மக்களின் வாழ்வாதார அபிவிருத்திக்கு பல்வேறு பங்குகளை வகிப்பதுடன் பிரதானமாக பாற்பண்ணை, கோழி வளர்ப்பு, பன்றி மற்றும் ஆடு வளர்ப்பு ஆகிய உப துறைகளை பிரதானமாகக் கொண்டதாகும். இது நாட்டின் பொருளாதாரத்தில் கிராமியப் பொருளாதாரத்தினை ஊக்குவித்தல் மற்றும் மக்களின் உணவு மற்றும் ஊட்டச்சத்துப் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் ஆகியவற்றின் மூலம் கணிசமான பங்கினை வகிக்கின்றது. இத்துறையானது தற்போது உற்பத்தியினை அதிகரிப்பதன் மூலம் உள்நாட்டு தேவைகளைப் பூர்த்தி செய்வது மட்டும் அல்லாது ஏற்றுமதிச் சந்தையிலும் வேகமாக வளர்ந்து வரும் துறையாகவும் உள்ளது. சுமார் 600,000 மக்கள் இத்துறையில் நேரடியாக ஈடுபட்டுள்ளதுடன் ஏறத்தாழ 20 சதவீதமான கிராமப்புறக் குடும்பங்கள் இதனை தமது வாழ்வாதாரமாகக் கொண்டு தங்கி வாழ்கின்றனர்.

கால்நடைத் துறையானது 2020 ஆம் ஆண்டில் தன்னிறைவடைதல் எனும் நோக்கினைப் பிரதானமாகக் கொண்டுள்ளது. அத்துடன் அதிகளவு தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்துவதுடன் கால்நடைக் கைத்தொழிலின் வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் அதேவேளையில் ஏனைய கால்நடை உற்பத்திகளை மலிவு விலையிலும் பெற்றுக்கொடுப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

2017 ஆம் ஆண்டில் இத்துறைக்கான முதலீடு பிரதானமாக கால்நடை மேம்பாடு மற்றும் அபிவிருத்தி,சிறந்த கால்நடைகளை இறக்குமதி செய்தல், MILCO வின் பால் பதனிடும் தொழிற்சாலைகளை நவீன மயப்படுத்தல், கால்நடை சுகாதார அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் மனித வள திறன் அபிவிருத்தி என்பவற்றிற்காக பயன்படுத்தப்பட்டது.

**தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் கால்நடை உப துறையினால் பூரணப்படுத்தப்பட்ட செயற்பாடுகள்**

- 09 கருத்திட்ட முன்மொழிவுகளை மதிப்பீடு செய்து தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளத் திணைக்களம் என்பவற்றுக்கு வழங்கியமை.

- கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சு மற்றும் ஜனாதிபதி செயலகத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட 04 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் சார்பாக அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

**விசேட நடவடிக்கைகள்:**

- இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கைக்கான சபையில் நடைபெற்ற ‘‘20,000 கால்நடைகளை இறக்குமதி செய்தல்’’ எனும் கருத்திட்டத்திற்குரிய வழிகாட்டல் குழுக் கூட்டங்களில் பங்கு பற்றியமை.
- இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கைக்கான சபையில் கால்நடை மற்றும் கோழிப்பண்ணைக்குரிய தேசிய குழுக் கூட்டங்களில் பங்கு பற்றியமை.
- தென் பிராந்திய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கான கால்நடைப்பிரிவிற்குரிய அத்தியாயம் தயாரிக்கப்பட்டது.
- JICA நிறுவனம் கொள்கை ஆய்விற்கான நிறுவனத்துடன் இணைந்து ஒழுங்கு படுத்தப்பட்ட பாலிற்கான பெறுமதிச்சங்கிலி ஆய்விற்குரிய செயலமர்வில் பங்கு பற்றியமை.
- கால்நடைப் பிரிவிற்கான ‘‘அனர்த்தத்திற்குப் பின்னரான மீளமைப்பு மற்றும் மீள் நிர்மாணத்திற்கான திட்டம்’’ தயாரிக்கப்பட்டது.
- கால்நடைப் பிரிவுடன் தொடர்புடைய அரச நிறுவனங்களிற்கான ‘‘விவசாயப் பிரிவிற்கான நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை உள்ளூர் மயப்படுத்தல்’’ எனும் தலைப்பிலான செயலமர்வு ஒழுங்கு செய்யப்பட்டது.
- உணவு மற்றும் விவசாய நிறுவனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட ‘‘கால்நடைகளில் பாலினம்’’ எனும் தலைப்பிலான செயலமர்வில் பங்கு பற்றியமை.

- கிராமியப் பொருளாதார அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட ''பால் அபிவிருத்தித் திட்டம்'' எனும் தலைப்பிலான செயலமர்வில் பங்கு பற்றியதுடன் உள்ளீடுகளும் வழங்கப்பட்டன.

**மீன்பிடி**

நாட்டின் பொருளாதாரத்திற்கு மிகப்பெரிய விரிவாக்கத்தை வழங்கக்கூடிய சாத்தியக்கூறைக் கொண்டுள்ள ஒரு பெரிய துறை மீன்பிடியாகும். 2.6 மில்லியனுக்கும் அதிகமானோருக்கு வாழ்வாதாரத்தை வழங்குவதிலும், மக்களது உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதிலும் இது பொருளாதாரத்தில் ஒரு முக்கிய வகிபங்கைக் கொண்டுள்ளது. தற்போது, 53 சதவீத விலங்குப் புரதத் தேவையானது மீன் மற்றும் மீன் தொடர்பான உணவுப் பொருட்களிலிருந்து பெறப்படுகிறது. தலா மீன் நுகர்வு வருடத்திற்கு 16.9 கி.கிராம் ஆக இருக்கும் அதேவேளை, இது வருடத்திற்கு 22 கி.கிராம் ஆக அதிகரிக்கப்பட வேண்டும் என இலக்கையும் கொண்டுள்ளது. தற்பொழுது மொத்த மீன் உற்பத்தி 520,190 மெற்றிக் தொன்கள் ஆக இருப்பதுடன், இதில் கரையோர மீன்பிடி 87 சதவீதமாக உள்ளபோது, உள்ளூர் உற்பத்தி 11 சதவீதமாகவும், நன்னீர் மீன் உற்பத்தி 2 சதவீதமாகவும் உள்ளது.

2017 ஆம் ஆண்டில் இத்துறைக்கான மொத்த ஒதுக்கீடு ரூ. 7,976 மில்லியன் ஆகும். பிரதானமாக மூலதனச் செலவு ரூ. 6,163 மில்லியன் ஆனது துறைமுகங்கள், நங்கூரங்கள், இறங்கு துறைகள் உள்ளடங்கலாக மீன்பிடி உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல், நவீன தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்தல், உள்ளூர் உற்பத்தி, நன்னீர் மீன் உற்பத்திகளை அதிகரித்தல், ஆய்வு மற்றும் அபிவிருத்தி மற்றும் மீன்பிடி சமூகத்தினை வலுவூட்டி முன்னேற்றுதல் ஆகியவற்றிற்காக ஒதுக்கப்பட்டது.

**தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் மீன்பிடி உப துறையினால் பூரணப்படுத்தப்பட்ட செயற்பாடுகள்**

- 14 கருத்திட்ட முன்மொழிவுகளை மதிப்பீடு செய்து தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளத் திணைக்களம் என்பவற்றுக்கு வழங்கியமை.

- மீன்பிடி மற்றும் நீரியல் வள அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட 09 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் சார்பாக அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

**விசேட நடவடிக்கைகள்:**

- இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கைக்கான சபையில் நடைபெற்ற நீரியல் வளங்களிற்கான தேசிய குழுக் கூட்டங்களில் பங்கு பற்றியமை.

- இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கைக்கான சபையின் கீழ் உள்ள மீன்வளர்ப்பிற்கான தேசிய குழுவினால் ‘‘உலக மீன்வளர்ப்பின் போக்கு’’ எனும் தலைப்பிலான செயலமர்வில் பங்கு பற்றியதுடன் உள்ளீடுகளும் வழங்கப்பட்டன.
- மீன்பிடித் துறைக்கான ‘‘அனர்த்தத்திற்குப் பின்னரான மீளமைப்பு மற்றும் மீள் நிர்மாணத்திற்கான திட்டம்’’ தயாரிக்கப்பட்டது.
- நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் இலக்கம் 14 (கடல் சார்ந்த மற்றும் கடலோரச் சுற்றுச் சூழலை நிலையாக நிர்வகித்தல் மற்றும் பாதுகாத்தல் மூலம் குறிப்பிடத்தக்க பாதகமான விளைவுகளை தவிர்த்தல்) இற்கான உபாயங்கள், தேசிய குறிகாட்டிகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் நிதி ஒதுக்கீடுகளுடன் தொடர்புடைய அடைவுகள் என்பவற்றை உள்ளடக்கிய அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன.
- மீன்பிடித்துறையுடன் தொடர்புடைய அரச நிறுவனங்களிற்கான ‘‘விவசாயப் பிரிவிற்கான நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை உள்ளூர் மயப்படுத்தல்’’ எனும் தலைப்பிலான செயலமர்வு ஒழுங்கு செய்யப்பட்டது.
- மீன்பிடித்துறைக்குரிய அபிவிருத்திக்கான முன்னேற்றக்குழுக் கூட்டத்தினை ஒழுங்குபடுத்தியமை.
- தென் பிராந்திய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கான மீன்பிடித்துறைக்குரிய அத்தியாயம் தயாரிக்கப்பட்டது.
- மீன்பிடித்துறை அபிவிருத்திக்கான முன்னேற்றத்திற்குரிய வழிகாட்டல் குழுக் கூட்டம் ஒழுங்கமைக்கப்பட்டது.
- வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்குரிய மீன்பிடித்துறைக்கான அபிவிருத்தி முன்மொழிவு தயாரிக்கப்பட்டது –ONUR நிகழ்ச்சித்திட்டம்
- நவீன மீன்பிடி மற்றும் நீரியல் வளத்திற்கான கொள்கையினை முன்னேற்றகரமாக தயாரிப்பதற்குரிய செயலமர்வுகளில் பங்கு பற்றியமை.
- மீன்பிடித்துறைக்கான வியாபார முன்மொழிவு தொகுக்கப்பட்டது.

## நீர்ப்பாசனம் மற்றும் காணி

நீர்ப்பாசனத்துறை மீதான 2017 ஆம் ஆண்டிற்குரிய மொத்த செலவினம் சுமார் 60.19 பில்லியன்களாகும். அவற்றுள் 53.21 பில்லியன்கள் மூலதன செலவினமாகும். புதிய நீர்வள அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பாரியளவிலான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களான மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டுத் திட்டம், யான் ஓயா நீர்த்தேக்கக் கருத்திட்டம், மொரக்கஹகந்த மற்றும் களு கங்கை நீர்த்தேக்கக் கருத்திட்டம், உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்திக் கருத்திட்டம், காலநிலை அவதானிப்பு முன்னேற்ற கருத்திட்டம் (CRIP), அணைக்கட்டுப் பாதுகாப்பு மற்றும் நீர்வள அபிவிருத்திச் செயற்பாட்டு கருத்திட்டம் என்பனவற்றின் பணிகள்

தொடரப்பட்டன. அத்துடன் பல்வேறு புனர்நிர்மாண கருத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு விவசாயம் மற்றும் ஏனைய தேவைகளுக்கான நீர் விநியோகிக்கப்பட்டது.

காணித்துறை மீதான 2017 ஆம் ஆண்டிற்குரிய மொத்த செலவினம் சுமார் 9,479 மில்லியன்களாகும். அவற்றுள் 3,580 மில்லியன்கள் மூலதன செலவினமாகும். அவற்றுள் கணிசமான அளவு காணி உரிமை (பிம் சவிய) நிகழ்ச்சித்திட்டத்திற்காகவும் 2017 ஆம் ஆண்டில் குறிப்பிடும்படியான அளவில் செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், 2017 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் அரச அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களிற்காக நிலங்கள் இனங்காணப்பட்டு சுவீகரிக்கப்பட்டன.

**விசேட நடவடிக்கைகள்**

- 2018-2020 ஆண்டுக் காலப்பகுதிக்கான ஸ்மார்ட் பாசனக் காலநிலை விவசாயக் கருத்திட்டத்துடன் சமாந்தரமாக சிறு நீர்ப்பாசனத் திட்டங்களிற்கான புனர்நிர்மாண திட்டம் தயாரித்தமை.
- தென் பிராந்திய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கான நீர்ப்பாசனப்பிரிவிற்குரிய அத்தியாயம் தயாரித்தமை.
- 2017 ஆம் ஆண்டு வைகாசி மாதம் வெள்ளம் மற்றும் மண்சரிவு ஆகியவற்றினால் பாதிக்கப்பட்ட 14 மாவட்டங்களிற்கான அனர்த்தத்திற்குப் பின்னரான மீளமைப்பு மற்றும் மீள் நிர்மாணத்திற்கான திட்டத்திற்கான நீர்ப்பாசனத் துறைக்கான அறிக்கை தயாரித்தமை.
- மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சினால் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற வடக்கு நீர்வள அபிவிருத்தித் திட்டத்திற்கான தொழில்நுட்ப உள்ளீடுகள் மற்றும் வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன.
- சுற்றுலாக் கைத்தொழில் மேம்பாட்டிற்காக கல்பிட்டி பிரதேசத்திலுள்ள ஐந்து நிலத்துண்டுகளை இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்குவதற்காக அமைச்சரவை விஞ்ஞாபனம் ஒன்று தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது.

- தேசிய முன்னுரிமைக் கருத்திட்டங்களினால் பாதிக்கப்பட்ட ஆட்களின் மீள்குடியேற்றத்தினை விரைவுபடுத்துவதற்கும் நிலங்களை கையகப்படுத்தலை துரிதப்படுத்துவதற்குமான வரைவு சட்ட மூலத்திற்கான விசேட முன்னளிப்பு ஒன்று தயாரிக்கப்பட்டு பொருளாதார முகாமைத்துவ அலுவலகக்குழு முன்னிலையில் முன்னளிக்கப்பட்டது.

- இனங்காணப்பட்ட பிரதேச செயலகப்பிரிவுகளில் உள்ள அரச காணிகளின் தரவு சேகரிக்கப்பட்டு கூகுள் வரைபடத்தில் பார்வையிடுவதற்கு ஏற்றவகையில் இட அமைவுகள் வரைபடப்படுத்துவதற்காக நில அளவைத்திணைக்களத்திற்கு ஒத்துழைப்பு வழங்கப்பட்டது.

**தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் நீர்ப்பாசனப்பிரிவினால் நிறைவேற்றப்பட்ட பணிகள்**

- 13 கருத்திட்ட முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டு அவதானிப்புக்கள் வரவு செலவுத்திட்டத் திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளத் திணைக்களம் ஆகியவற்றிற்கு சமர்ப்பிக்கப்பட்டன.

- நீர்ப்பாசனம் மற்றும் நீர்வள முகாமைத்துவ அமைச்சு மற்றும் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றுச் சூழல் அமைச்சு என்பவற்றிலிருந்து சமர்ப்பிக்கப்பட்ட பன்னிரெண்டு அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அவதானிப்பு சமர்ப்பிக்கப்பட்டது.

- மொரகஹகந்த மற்றும் களுகங்கை நீர்த்தேக்க அபிவிருத்தி கருத்திட்டம், அணைக்கட்டு பாதுகாப்பு மற்றும் நீர்வள முகாமைத்துவ கருத்திட்டம், யான் ஓயா நீர்த்தேக்கக் கருத்திட்டம், மற்றும் காலநிலை அவதானிப்பு முன்னேற்றக் கருத்திட்டம் (CRIP) என்பவற்றின் கருத்திட்ட வழிகாட்டல் குழுக் கூட்டங்களில் பங்குபற்றியமை.

- காணி மற்றும் பாராளுமன்ற மறு சீரமைப்புகள் அமைச்சு மற்றும் உலக வங்கி இணைந்து ஒழுங்கமைத்த இலங்கையின் காணி நிர்வாகத்தின் தரத்தினை உயர்த்துவதற்கான செயலமர்வில் பங்குபற்றியமை.

- சுற்றுலாக் கைத்தொழில் மேம்பாட்டிற்காக கல்பிட்டி பிரதேசத்திலுள்ள ஐந்து நிலத்துண்டுகளை இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்குவதற்காக அமைச்சரவை விஞ்ஞாபனம் ஒன்று தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது.

- நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்ற அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கான கொள்கை மீளாய்வுக் கூட்டங்கள், முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் ஆகியவற்றில் பங்குபற்றியமை.

**பெருந்தோட்டத்துறை**

பெருந்தோட்டத் துறையானது பிரதானமாக தேயிலை, இறப்பர், தென்னை என்பவற்றை பிரதானமாக உள்ளடக்கியதுடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இதன் பங்களிப்பு அண்ணளவாக 2 சதவீதமாகும். இத்துறை மொத்த ஏற்றுமதி வருமானத்தில் 26 சதவீதமான பங்களிப்பினைச் செய்வதுடன் 2017 ஆம் ஆண்டில் அதன் பெறுமதி ரூபா 2.95 பில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலராகும். 2017 இல் தேயிலையின் ஏற்றுமதி வருமானம் ரூபா 1,535 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலராக இருப்பதுடன் இது 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 26 சதவீதம் அதிகமாகும். எனினும் இவ்விரண்டு ஆண்டுகளிலும் ஏற்றுமதியின் அளவில் (2017 இல் 288.98 மில்லியன் கிலோ கிராம்) மிகப் பெரிய வேறுபாடு காணப்படவில்லை

(2016 இல் ஏற்றுமதியின் அளவு 288.77 மில்லியன் கிலோ கிராம்). ஏற்றுமதி வருமானம் அதிகமானதிற்கு மிகவும் பிரதானமான காரணமொன்றாக தேயிலை ஏற்றுமதியில் ஏற்பட்ட பன்முகத்தன்மையினைக் குறிப்பிடலாம். 0.9 மில்லியன் ஹெக்டெயர் பரப்பளவில் பெருந்தோட்டப் பயிர்கள் செய்கை பண்ணப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக சீனி, பாம் எண்ணெய், முந்திரிகை ஆகியனவும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் குறிப்பிடத்தக்களவு பங்களிப்பினை வழங்கும் பிரதான உப பயிர்களாகும். அண்ணளவாக 5 சதவீதமான சனத்தொகையினர் (அண்ணளவாக 1 மில்லியன்) பெருந்தோட்ட நிலங்களில் வாழ்வதுடன் பெருந்தோட்டத் துறையானது நேரடியாகவும் மறைமுகமாகவும் 1.5 மில்லியனிற்கும் அதிகமான மக்களிற்கு வேலைவாய்ப்பினை வழங்குகின்றது. நாட்டின் குறைந்த உற்பத்தி காரணமாக தொழிற்சாலைகளின் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யும் முகமாக மூலப்பொருட்கள் மற்றும் பதிலீட்டுப் பொருட்கள் என்பன இறக்குமதி செய்யப்பட்டன. பாதகமான காலநிலை மாற்றங்களாகிய வெள்ளம், வரட்சி, மண்சரிவு ஆகியன பெருந்தோட்டப்பயிர்களின் விளைச்சல் மற்றும் உற்பத்தி வீதம் என்பவற்றினைப் பெருமளவில் பாதித்தன.

பெருந்தோட்டத் துறையானது முக்கியமாக சிறு உற்பத்தியாளர்களினால் ஆதிக்கம் செலுத்தப்படுவதுடன் மொத்த உற்பத்தியில் 70 சதவீதம் பங்களிப்புச் செய்கின்றது. பெருந்தோட்டச் சமூகத்தவரின் சமூக பொருளாதார வசதிகள் குறைவாகக் காணப்படுவதனாலும் தொழிற் சங்கங்களின் தலையீடுகளினாலும் இத்துறையின் உற்பத்தித்திறன் குறைந்து கொண்டு செல்கின்றது. எனவே இத்துறையினரது வாழ்க்கைத்தரத்தினை உயர்த்துவதற்காக இந்திய அரசின் நன்கொடை உதவியுடன் சுமார் 2500 வீடுகள் அமைக்கும் திட்டம் நடைமுறைப்படுத்துகின்ற அதே வேளை இன்னும் 10,000 வீடுகள் அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**விசேட நடவடிக்கைகள்**

- பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தில் (2017- 2020) பெருந்தோட்டத் துறைக்கான குறிப்பு தயாரிக்கப்பட்டுள்ளது.
- தூர நோக்கு 2025 ஆவணத்தில் பெருந்தோட்டத் துறை அத்தியாயத்திற்கான அவதானிப்புக்கள் வழங்கப்பட்டன.
- வெள்ளம் தொடர்பான தரவுகள் சேகரிக்கப்பட்டு அனர்த்தத்திற்கு பின்னரான தேவைகளிற்கான மதிப்பீடு செய்யப்பட்டு பெருந்தோட்டத் துறைக்கான அத்தியாயம் தயாரிக்கப்பட்டுள்ளது.
- ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட கொழும்பு – திருகோணமலை பொருளாதார நடை அபிவிருத்தி (Economic Corridor Development) ஆய்வுக்குரிய தரவு சேகரிப்பதற்கான ஒத்துழைப்பு வழங்கப்பட்டது.

**தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் விவசாயப்பிரிவினால் நிறைவேற்றப்பட்ட பணிகள்**

- 20 கருத்திட்ட முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டு அவதானிப்புக்கள் வரவு செலவுத்திட்டத் திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளத் திணைக்களம் ஆகியவற்றிற்கு சமர்ப்பிக்கப்பட்டன.
- பெருந்தோட்டத் துறையுடன் தொடர்புடைய 13 அமைச்சரவை விஞ்ஞாபனங்களிற்கு அமைச்சரவை அவதானிப்புக்கள் தயாரிக்கப்பட்டன.
- "STARR" கருத்திட்டத்திற்கான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள்,கொள்கை மீளாய்வுக் கூட்டங்கள் மற்றும் வழிகாட்டல் குழுக் கூட்டங்கள் ஆகியவற்றில் பங்குபற்றியமை.

## 3.3 கைத்தொழில்கள், வர்த்தகம், சுற்றுலாத்துறை, மின்சாரம் மற்றும் சக்தி வளத்துறை

### கைத்தொழில், வர்த்தகம் மற்றும் முதலீட்டுத்துறை

அரசானது கைத்தொழில்கள், வர்த்தகம் மற்றும் முதலீட்டுத் துறையினை நாட்டின் நிலைதகு பொருளாதார அபிவிருத்திக்குரிய முக்கிய துறையாக இனங்கண்டுள்ளது. எனவே, தேசிய திட்டமிடல் திணைக்களமானது தொழிற்சாலைகள், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள் (SMEs), அரசிற்கு சொந்தமான தொழில் முயற்சிகள் (SOEs), சர்வதேச வர்த்தகம் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடு ஆகியவற்றை வலுவூட்டுவதற்கு தேவையான உள்ளீடுகள் பெற்றுக்கொடுப்பதன் மூலமும் மற்றும் தலையிடுவதன் மூலமும் நாட்டின் சகல அபிவிருத்தி நோக்கங்களை அடைவதனை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**2017 இல் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்**

1. 91 கருத்திட்ட முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டு சிபார்சுகள் வரவு செலவுத்திட்டத் திணைக்களம் வெளிநாட்டு வளத் திணைக்களம் மற்றும் ஏனைய உரிய நிரல் நிறுவனங்கள் ஆகியவற்றிற்குச் சமர்ப்பிக்கப்பட்டன.

2. உரிய நிரல் அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 10 அமைச்சரவை விஞ்ஞாபனங்களிற்கு அமைச்சரவை அவதானிப்புக்கள் தயாரிக்கப்பட்டன.

3. பொருளாதார நடை அபிவிருத்தி (Economic Corridor Development) தொடர்பான பயிற்சிப் பட்டறையொன்று ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் இணைந்து சகல பங்குதாரர்களுக்கும் நடாத்தப்பட்டதுடன் ஆய்வு விடயங்களுக்கு தொழில்நுட்ப உதவியும் வழங்கப்பட்டது.

4. போக்குவரத்துடன் தொடர்புடைய வேலைக்குழுவினருக்கு தென் ஆசிய உப பிராந்தியங்களிற்கான பொருளாதாரக் கூட்டு வர்த்தக வசதிகள் (SASEC) தொடர்பான கூட்டத்தொடர்கள் ஒழுங்கமைக்கப்பட்டன.



5. தென் ஆசிய உப பிராந்தியங்களிற்கான பொருளாதாரக் கூட்டு (SASEC) கழிவகற்றல் ஏற்பாடுகள் முறைமையில் வர்த்தக ரீதியிலான கண்டறியும் ஆய்வுக்குரியதும் மற்றும் தொழில்நுட்பத்தடைகள் என்பவற்றிற்கானதுமான செயலமர்வு ஒழுங்கு செய்யப்பட்டது.

6. தேசிய ஏற்றுமதி உபாயத்திற்கான கொள்கை உள்ளீடுகள் வழங்கப்பட்டன.

7. வரவு செலவுத்திட்ட முன்மொழிவாக ஆரம்பிக்கப்பட்ட "உலகச் சந்தைப் பிரச்சாரம்" எனும் கருத்திட்டம் நடைமுறைப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கியமை.

8. தூர நோக்கு 2025 கொள்கை ஆவணத்திற்கான செயலமர்வுத் தொடர்களிற்கு கொள்கை உள்ளீடுகள் வழங்கப்பட்டன.

9. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் நிகழ்ச்சித்திட்டத்திற்கான துறை ரீதியிலான உள்ளீடுகள் வழங்கப்பட்டன.

**சுற்றுலாத்துறை**

தற்போது சுற்றுலாத்துறையே நாட்டில் மூன்றாவது வெளிநாட்டுச் செலாவணியை பெற்றுத்தரும் கைத்தொழிலாக விளங்குகின்றது. தற்போதைய மொத்த தேசிய உள்நாட்டு உற்பத்தியில் சுற்றுலாத்துறையின் பங்களிப்பு அண்ணளவாக 3.5 சதவீதம் ஆகும். 2017 ஆம் ஆண்டின் இறுதியில் அண்ணளவாக 2.1 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் இந்நாட்டிற்கு வருகை தந்துள்ளனர். சுற்றுலாத்துறையானது தனியார் துறையினால் மேற்கொள்ளப்படும் ஒரு கைத்தொழிலாக இருக்கின்ற பொழுதிலும் உகந்த சூழ்நிலையினை ஏற்படுத்துவதற்காக அரசாங்கமானது வசதியளிப்பவராக செயற்படுகின்றது.

2017 ஆம் ஆண்டுக் காலப்பகுதியினுள் சுற்றுலாத்துறையுடன் தொடர்புடைய கீழ்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

**விசேட நடவடிக்கைகள்**

1. சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சிடமிருந்து 03 கருத்திட்ட முன்மொழிவுகள் மதிப்பிடப்பட்டன.
2. சுற்றுலாத்துறை அபிவிருத்தியுடன் தொடர்புபட்ட 04 அமைச்சரவை விஞ்ஞாபனங்களிற்கு தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டது.

**தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புத்துறை**

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையின் கொள்கையானது வேலையாட்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கும் வளர்ப்பதற்கும் மற்றும் பொருளாதார அபிவிருத்தியினை அடைவதற்கு முக்கியமான ஆரோக்கியமான கைத்தொழில் உறவுகளை மேம்படுத்தலையும் நோக்காகக் கொண்டுள்ளது. இந்நிலைமையில், நடைமுறையில் உள்ள சட்டங்களையும் ஒழுங்குகளையும் செயற்படுத்தும் போது வளர்ந்து வரும் நிலைமையினை அடைந்து கொள்வதற்கு ஏற்ப தேவையான சகல சீர்திருத்தங்களை மேற்கொள்வதுடன் அவை யாவும் சர்வதேசத்தின் சிறந்த நடைமுறையுடன் ஒத்துப் போகக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும். இனங்காணப்பட்ட இத்தேவையினை அடைவதற்கு 2017 ஆம் ஆண்டில் கீழ்வரும் பணிகளை ஆற்றி பங்களிப்புச் செய்துள்ளது.

1. உரிய நிரல் அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 14 கருத்திட்ட முன் மொழிவுகள் மதிப்பிடப்பட்டன.
2. 06 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அவதானிப்புக்கள் வழங்கப்பட்டன.
3. ஆசிய அபிவிருத்தி வங்கியின் தொழில் கண்டறி ஆய்வு மற்றும் நாட்டின் கண்டறி ஆய்வு வரைவு ஆகியன பார்வையிடப்பட்டு அவதானிப்புக்கள் வழங்கப்பட்டன.
4. தேசிய மனித வளங்கள் மற்றும் வேலை வாய்ப்புக் கொள்கைக்கான தகவற் தொழில்நுட்ப அடிப்படையிலான இணைப்பு முறைமையினை நடைமுறைப்படுத்துவதற்குரிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்திற்கு பங்களிப்ப வழங்கியமை.

**மின்சாரம் மற்றும் எரிசக்தித் துறை**

மின்சாரம் மற்றும் எரிசக்தித் துறையானது மக்களின் அன்றாட செயற்பாடுகளுக்கு முக்கியமான காரணியாகவும் கைத்தொழில் துறைக்கு இன்றியமையாததாகவும் உள்ளது. அரசாங்கமானது இத்துறையின் அபிவிருத்திக்கு வருடம் முழுவதும் மகத்தான பங்களிப்பினை வழங்கியுள்ளதுடன் மேலும் தேசிய திட்டமிடல் திணைக்களமானது ஒட்டுமொத்த இலக்குகளையும் அடைவதற்கு பங்களிப்பு ஆற்றியுள்ளது.

### 2017 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட கருத்திட்டங்கள்

1. இக் காலப்பகுதியில் சுமார் 11 கருத்திட்டங்கள் மீளாய்வு செய்யப்பட்டு தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் மின்சாரம் மற்றும் சக்திவளத்துறையின் அபிவிருத்தி செயற்பாடுகளிற்காக அனுமதி வழங்கப்பட்டது.
2. இதற்கு மேலதிகமாக தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் மின்சாரம் மற்றும் சக்திவளத் துறையினால் 2017 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- மின் சக்தி அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட 04 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அவதானிப்புக்கள் வழங்கப்பட்டன.
- சக்தி வளத் துறை வெளிநாட்டுக் குழுக்களிற்கான அவதானிப்புக்கள் தயாரிக்கப்பட்டன.
- சக்தி வளத் துறையுடன் தொடர்புடைய பங்கு தாரர்களுடன் “இலங்கையினை திரவ இயற்கை வாயு மற்றும் திரவ பெற்றோல் வாயுவின் கேந்திர நிலையமாக மாற்றி அமைத்தல்” கருத்திட்டத்திற்குரிய (LNG) செயலமர்வு ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டு தொழில்நுட்ப உள்ளீடுகள் வழங்கப்பட்டன.




- மன்னார் காற்றாலைக் கருத்திட்டத்திற்குரிய ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடனுக்குரிய பேச்சு வார்த்தைகளில் பங்கு பற்றியமை.

## 3.4 வீதிகள், துறைமுகங்கள், விமானப் போக்குவரத்து மற்றும் போக்குவரத்து

### வீதித் துறை

பொருளாதாரச் செயற்பாடுகளின் முன்னேற்றத்துடன் வீதி மற்றும் அதனுடன் தொடர்புடைய உட்கட்டமைப்பு அபிவிருத்தியானது பிரதானமான செயற்பாடாகும். இச்செயற்பாட்டிற்கு பங்களிப்பது அரசாங்கத்தின் முதன்மை நோக்கமாகும். இத்துறையின் சீரான இயக்கத்திற்கு தேவையான வசதிகளை வழங்குவதற்காக ஏனைய போக்குவரத்து மார்க்கங்களான புகையிரத

மற்றும் விமான சேவைகளை வீதித்துறையுடன் ஒன்றிணைக்கும் வலையமைப்புத்திட்டமும் முதலீடும் அத்தியாவசியமாகும். வீதி வலையமைப்பின் பிரதான தொழிற்பாடாக நாட்டின் சகல பாகங்களையும் உள்ளடக்கிய சீரான இயக்கத்தினை உறுதிப்படுத்துவதாகும். இத்துறையின் பிரதான சவால்களாக நாட்டின் ஒவ்வொரு மூலையையும் இணைத்தல், வளர்ச்சி அடைந்து வரும் நிலையங்களுக்கிடையில், தலைநகர், மாகாண தலைநகர்கள் மற்றும் அபிவிருத்தி மத்திய நிலையங்களுக்கிடையில் சீரான இயக்கத்தினை ஏற்படுத்துதல் என்பவற்றைக் கூறலாம். இவ்வாறான பரந்த அளவிலான தேவைப்பாடுகளை நிறைவு செய்வதற்கு திணைக்களத்தின் வீதி மற்றும் போக்குவரத்துத் துறையானது கருத்திட்டக் கொள்கைகளை அபிவிருத்தி செய்தல், கருத்திட்டங்களை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்தல் ஆகிய செயற்பாடுகளை மேற்கொள்கின்றது.

### போக்குவரத்து

வீதி விபத்துக்களைக் குறைத்தல், நகரப் பாதைகளில் ஏற்படும் கடுமையான போக்குவரத்து நெரிசலைக் குறைத்தல், கிராமத்திற்கும் நகரத்திற்குமான தொடர்பினை அதிகரிக்கச் செய்தல், பொதுப் போக்குவரத்துச் சேவையினை நவீன மயப்படுத்துதல் மூலம் முன்னேற்றுதல்

ஆகியவற்றின் மூலம் நாட்டில் வினைத்திறனான போக்குவரத்து முறைமையினை வளர்ச்சி அடையச் செய்தல் போக்குவரத்துத்துறையின் நோக்கமாகும்.

### துறைமுகங்கள்

இலங்கையில் 2017 ஆம் ஆண்டில் துறைமுகங்கள் மற்றும் அதனோடு இணைந்த நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்ட காலமாகக் கருத முடியும். இவ்வருடத்தில் கொழும்புத் துறைமுகத்தில் மொத்த சரக்குக் கப்பல்கள் 6 மில்லியன் (20 அடிகளைக் கொண்ட கொள்கலன்களைக் (TEU)) கையாண்டுள்ளது. இக்காலப்பகுதியில் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தினை அபிவிருத்தி செய்வதற்காக இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டமையும் முக்கியமான நிகழ்வு ஒன்றாகும். 2017 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் வருகை தந்த மொத்தச் சுற்றுலாப் பயணிகளில் 25,644 பயணிகள் கொழும்பு, காலி மற்றும் ஏனைய துறைமுகங்களினூடாகவே வருகை தந்துள்ளனர்.

### விமானப் போக்குவரத்து

2016 ஆம் ஆண்டில் இலங்கையின் விமானப் போக்குவரத்தின் ஊடாக சுமார் 9.5 மில்லியன் விமானப் பயணிகளைக் கையாண்டிருப்பதுடன் 253,941 கிலோ கிராம் ஆகாய சரக்கு பரிமாற்றலும் நடைபெற்றுள்ளன. பண்டார நாயக்க சர்வதேச விமான நிலையமானது பயணிகளைக் கையாளுதல், ஆகாய சரக்கு பரிமாற்றல் மற்றும் ஆகாய விமானங்களின்

அசைவுகள் என்பவற்றில் ஒரு நிலையான வளர்ச்சியைக் காட்டுகின்றது. இத் துறையின் நோக்கங்களாக உலகின் ஏனைய நாடுகளுடன் வலுவான விமானப் போக்குவரத்து வலையமைப்பினை தாபிப்பதுடன் விசேடமாக சுற்றுலா மற்றும் சர்வதேச வர்த்தகம் ஆகிய துறைகளுக்குரிய சிறந்த விமானப் போக்குவரத்து சேவையினை வழங்குவதும் காணப்படுகின்றன.

முக்கிய நிகழ்வுகள்

- உரிய நிரல் அமைச்சுக்களால் சமர்ப்பிக்கப்பட்ட 23 புதிய கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.
- வீதி, போக்குவரத்து, துறைமுகங்கள் மற்றும் விமானப் போக்குவரத்துத் துறைக்கான கருத்திட்ட வழித்தடங்கள் உருவாக்கப்பட்டுள்ளது.
- தொடர்புடைய கொள்கைகள் மற்றும் உபாயங்கள் ஆகியவற்றை உருவாக்குவதற்கு உரிய அமைச்சுக்களிற்கு தொழில்நுட்ப உள்ளீடுகள் வழங்கப்பட்டன.
- பின்வரும் குழுக்களுக்கு பங்களிப்புடன் பங்குபற்றியமை
    - தேசிய கடல் வழிக் கொள்கை, தேசிய வீதிக் கொள்கை மற்றும் தேசிய போக்குவரத்துக் கொள்கை ஆகியன மேம்படுத்தப்பட்டன.
    - ஒளி புகையிரத போக்குவரத்து அமைப்பிற்கான இயக்குவதற்கும் பராமரிப்பதற்குமான பொறிமுறை தயாரிக்கப்பட்டது.
    - தெற்கு அதிவேகப் பாதை நீடிப்பு, இரத்தினபுரிக்கான (ருவன் புர) அதிவேகப் பாதைக் கருத்திட்டம், ஒன்றிணைக்கப்பட்ட வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம், பாரம் குறைந்த புகையிரத சேவைகளை அறிமுகம் செய்யும் கருத்திட்டம் மற்றும் கொழும்பு புற நகர் புகையிரத சேவைக் கருத்திட்டம் ஆகியவற்றிற்கான கருத்திட்ட வழிகாட்டல் குழுக்களில் பங்களிப்புடன் பங்குபற்றியமை.

- 09 Aide Memoires அபிவிருத்தித் திட்டங்களுக்கான கருத்துகளை தயாரித்து வெளிநாட்டு வள திணைக்களத்திற்கு வழங்கியமை.
- துறைகளுடன் தொடர்புபட்ட தற்காலப் பிரச்சனைகள் ஆராயப்பட்டது
- உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு, போக்குவரத்து மற்றும் விமான சேவை அமைச்சு, துறைமுகம் மற்றும் கப்பற்றுறை அமைச்சு அல்லது ஏனைய அமைச்சுக்கள் என்பவற்றிலிருந்து பெறப்பட்ட பாதை மற்றும் போக்குவரத்து தொடர்பான அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அவதானிப்புக்கள் வழங்கப்பட்டது.
- 11 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அமைச்சரவை அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டன.
- செயற்குழு கூட்டங்கள், முன்னேற்ற மீளாய்வுக்கூட்டங்கள் மற்றும் வெளிநாட்டு தூதுக்குழுக்கள் உள்ளடங்கலாக சுமார் 55 செயலமர்வுக்கூட்டங்களில் பங்குபற்றியுள்ளமை.

## 3.5 வீடமைப்பு, நகர அபிவிருத்தி, நீர் வளம் மற்றும் சுற்றாடல்

### வீடமைப்பு மற்றும் நிர்மாணம்

இப்பிரிவின் தொழிற்படு பரப்பானது பிரதானமாக வீடமைப்பு மற்றும் நிர்மாணமத்துறைகளை உள்ளடக்கியுள்ளது. இத் தொழிற்பாடுகளை தேசிய திட்டமிடல் திணைக்களமானது வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு, பாரிய நகரம் மற்றும் மேற்கத்திய அபிவிருத்தி அமைச்சு, சிறைச்சாலை விவகாரங்கள், மீள்குடியேற்றம், புனர்நிர்மாணம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு மற்றும் மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சு ஆகிய நிரல் அமைச்சுக்களுடன் இணைந்து செயற்பட்டது.

அரசாங்கத்தினால் வரையறுக்கப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்வதற்கு வீடமைப்பு மற்றும் நிர்மாணமத்துறையானது பல்வேறுபட்ட வகிபங்குகளை ஆற்றுகின்றது. அரசாங்கத்தின் கொள்கையானது பிரதானமாக சமூகத்தில் நலிவுற்றோரான கிராமிய வறியவர்கள், பெருந்தோட்ட சமூகம், நகர மற்றும் நகரமயமாகி வரும் பிரதேசங்களில் வாழும் சேரிக் குடிகள் மற்றும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டோரின் இருப்பிடத்திற்கான தேவையினை நேரடியாக பண உதவி மற்றும் கட்டிடப் பொருட்களைப் பெற்றுக் கொடுத்தல், சலுகை அடிப்படையிலான கடன் வசதிகள் மற்றும் வீடுகளை நிர்மாணிப்பதற்கான தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குவதுடன் நியாயமான விலையில் கொள்வனவு செய்யக்கூடிய குழுவினரை இலக்காகக் கொண்டு வீட்டுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு அவசியமான வீடுகளை நிர்மாணிப்பதில் தனியார்துறையின் முதலீட்டினை ஊக்குவிப்பதற்கு சாத்தியமான சூழலை உருவாக்குவதற்கும் கவனம் செலுத்துதல் ஆகும்.

### தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறையினால் 2017 ஆம் ஆண்டு பூரணப்படுத்தப்பட்ட செயற்பாடுகள்

<u>கருத்திட்ட முன்மொழிவுகளை மதிப்பீடு செய்தல்</u>

- 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 26 கருத்திட்ட முன்மொழிவுகள் கிடைக்கப்பெற்றன. அவற்றுள் 23 மதிப்பீடு செய்யப்பட்டு தேசிய வரவு செலவுத்திட்டம் மற்றும் வெளிநாட்டு வளத் திணைக்களத்திற்கும் பிரதிகள் உரிய அமுல்படுத்தும் நிறுவனங்களுக்கும் சமர்ப்பிக்கப்பட்டன.

<u>அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அவதானிப்புக்கள் தயாரித்தல்</u>

- வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு, தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு, கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சு, மற்றும் மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சு ஆகியவற்றால்

அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 09 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் சார்பாக அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

<u>தென் பிராந்திய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் தயாரித்தல்</u>

- தென் பிராந்திய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கான வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறைக்குரிய அறிக்கை தயாரிக்கப்பட்டது.

<u>கூட்டங்கள், கலந்துரையாடல்கள் மற்றும் கொள்கைகளிற்கான உரையாடல்கள் ஆகியவற்றில் பங்கு பற்றல்</u>

- நிரல் அமைச்சுக்களுடனும் மற்றைய உரிய நிறுவனங்களுடனும் அவற்றினால் சமர்ப்பிக்கப்பட்ட கருத்திட்ட முன் மொழிவுகள் பற்றி கலந்துரையாடுவதற்காக 2017 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

- நிர்மாணக் கைத்தொழில் நிறுவனங்களின் பங்குதாரர்களுடன் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடுவதற்காக 2017 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் கூட்டத் தொடர்கள் நடாத்தப்பட்டன.

- வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சினால் ஒழுங்கமைக்கப்பட்ட கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சட்ட மூலம் மற்றும் கூட்டு ஆதன சட்ட மூலம் ஆகியவற்றின் திருத்தங்களிற்கான தேசிய குழுக் கூட்டங்களில் பங்கு பற்றியமை.

- வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சினால் ஒழுங்கமைக்கப்பட்ட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களில் பங்கு பற்றியமை.

நகர அபிவிருத்தி

நகர அபிவிருத்தித் துறையானது பாரிய நகரம் மற்றும் மேற்கத்திய அபிவிருத்தி அமைச்சுடன் மிகவும் நெருக்கமாகச் செயற்பட்டு கொள்கை மற்றும் உபாய வழிகாட்டல்கள் என்பவற்றை வழங்கி இலங்கையில் எதிர்பாரா நகரமயமாகல் அபிவிருத்தி அனுபவத்தையும் கொண்டுள்ளது.

இன்றைய உலகில் நகரங்களே பொருளாதாரத்தை இயக்குகின்றன. அவை பொருளாதாரத்தின் பல்வேறு கூறுகளையும் தன்னகத்தே கொண்டுள்ளதுடன் பொருளாதாரத்திற்கு பாரிய பங்களிப்பையும் ஆற்றுகின்றன. இருந்தும் இலங்கையில் சுமார் 50 சத வீதமான சனத்தொகையினர் நகரத்தில் வாழ்கின்றனர். ‘‘மறைமுகமான நகராக்கம்’’ காரணமாக உண்மையான பெறுமதியினை மதிப்பீடுவது கடினமாகும். நகரங்களில் காணப்படும் புதிய அபிவிருத்தி உள்ளார்ந்த ஆற்றல்களை அடையாளம் காண்பதன் மூலம் எதிர்கால முதலீடுகளை சரியான வகையில் மேற்கொள்வதற்கான வாய்ப்புக்களை திறந்து கொடுக்கும். ஆகவே, நகரங்களை உருவாக்கும் போது அது முறையானதாகவும், தொடர்புபட்டதாகவும் நிலைபேறான நகரமயமாதலுக்குத் தடையற்றதாகவும் காணப்படுவதோடு இலகுவான பொருளாதார செயலாற்றுகைக்கு உறுதியளிக்கவும் வேண்டும்.

இலங்கையில் மேல் பிராந்தியமானது நகர அபிவிருத்திக்கு மிகவும் அதிகமான பங்கினை வழங்குகின்றது.நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 6 சத வீதத்தைக் கொண்டுள்ள மேல் மாகாணமானது நாட்டின் சனத்தொகையில் 29 சத வீதத்தை தன்னகத்தே அடக்கியுள்ளது. மேல் மாகாணமானது நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியில் 42 சத வீதத்தை உற்பத்தி செய்யும் அதே வேளை கைத்தொழிலில் பெறுமதி சேர்க்கையில் 73 சத வீதத்திற்கு பங்களிப்புச் செய்து நாட்டின் பொருளாதாரத்திற்கு தனிப்பெரும் பங்காளராக காணப்படுகின்றது. நாட்டின் அனைத்து சர்வதேச வர்த்தக நடவடிக்கைகளும் முழுமையாக கொழும்புத் துறைமுகத்தை மையமாகக் கொண்டே இடம்பெறுகின்றன. நாட்டின் ஏனைய பிரதேசங்களில் வேலை வாய்ப்புக்கள் உருவாக்குதல் மற்றும் பொருளாதார வளர்ச்சியை வழிப்படுத்துவதற்கும் அவசியமான மூலதனம், மனித வளம், தொழில்நுட்பம் மற்றும் ஏனைய சேவைகளின் பெரும் பகுதியை மேல் மாகாணமே உருவாக்குகின்றது. எனவே, மேல் மாகாண பாரிய மாநகர எண்ணக் கருவானது மேல் மாகாணத்தில் நகர திரட்சியின் வெளிச்சார்ந்த மாற்றத்தினூடாக இலங்கையினை ஒரு அதியுயர் வருமானம் உழைக்கும் அபிவிருத்தி அடைந்த நாடு என்ற அந்தஸ்த்தினை அடையும் உபாயமாகக் கொண்டுள்ளது.

**விசேட நடவடிக்கைகள்**

- 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இத்துறையினால் நிதி மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சிற்கு 08 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சிற்கு 03 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கும் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் சார்பாக அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டன.
- 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நகர அபிவிருத்தி மற்றும் நகரத் திட்டமிடல் ஆகியவற்றுடன் சம்பந்தப்பட்ட 159 கருத்திட்ட முன்மொழிவுகள் கிடைக்கப்பெற்றன. அவற்றுள் 153 கருத்திட்ட முன்மொழிவுகள் பல்வேறு நடவடிக்கைகளின் பொருட்டு ஏற்கனவே மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.
- நகர அபிவிருத்தித் துறையினால் எதிர்கால அபிவிருத்தி உபாயங்களிற்கான கொள்கை அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன.
- எதிர் காலங்களில் நடைமுறைப்படுத்தப்பட உள்ள முன்மொழியப்பட்ட கருத்திட்டங்களிற்கான கருத்திட்ட இருப்பு புத்தாக்கம் செய்யப்பட்டது.
- நகர அபிவிருத்தித் துறையின் முன்னுரிமைப்படுத்தப்பட்ட புதிய கருத்திட்டங்கள்2018 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தில் உள்ளடக்கப்படுவதற்காக 2018 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டம் தயாரிப்பில் பங்களிப்பு செய்யப்பட்டது.
- பாரிய நகரம் மற்றும் மேற்கத்திய அபிவிருத்தி அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்ற ‘‘உபாய நகரங்கள் அபிவிருத்தி கருத்திட்டம்’’ எனும் கருத்திட்டத்தின் கீழ் இனங்காணப்பட்ட நகரங்களை அபிவிருத்தி செய்வதற்குரிய

பங்களிப்பினை வழங்குவதற்கு முன் வந்துள்ள ஆர்வமுள்ள அபிவிருத்திப் பங்காளிகளுடன் ஆலோசிக்கப்பட்டதுடன் தேசிய அபிவருத்தி நிகழ்ச்சித்திட்டத்துடன் ஒன்றிணையக்கூடிய உண்மையில் அபிவிருத்தித் தேவைப்பாடு உடைய நகரங்களை தெளிவாக இனங்கண்டு முன்னிலைப்படுத்துவதற்குரிய வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன.

**நீர் வழங்கல் மற்றும் கழிவகற்றல் ஏற்பாடுகள்**

நீர் வசதித்தேவையானது நாட்டிலுள்ள சகல பிரஜைகளின் அடிப்படைத் தேவையாக மட்டுமன்றி நாட்டில் மக்களின் சமூகப் பொருளாதார நிலைகளை மேம்படுத்துவதற்குரிய முன் தேவையும் ஆகும்.நாடு முழுவதும் மக்களினால் நியாயமான விலையில் தேவையான அளவில் தரமான குடிநீரைப் பெற்றுக் கொள்ளக் கூடியவாறு இருத்தல் மிகவும் பிரதானமான பாதுகாப்பான திருப்தியான குடிநீர் வழங்கல் சேவைக்குரிய முன் தேவை ஆகும். எனவே அரசின் கொள்கை வழிகாட்டல் ஆனது அனைவருக்கும் பொதுவான சுகாதார வசதிகளை பெற்றுக் கொடுத்தலும் 2020 ஆம் ஆண்டளவில் 60 சதவீதம் குழாய்மூல குடிநீர் வசதிகளை வழங்குதலும் குழாய்மூல கழிவுநீரகற்றல் செயற்பாடுகளை 7 சதவீதமாக உயர்த்துதலும் ஆகும்.

தற்போதுள்ள கொள்கை வழிகாட்டலானது இத்துறையில் தற்போதுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதோடு அது ஐக்கிய நாடுகள் சபையினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் 6 ஆவது இலக்கான 2030 ஆண்டின் போது அனைவருக்கும் சமத்துவமான சுத்தமான குடிநீர் மற்றும் துப்பரவு ஏற்பாட்டு வசதிகள் கிடைப்பதனை உறுதிப்படுத்தல் என்ற இலக்கினை அடைவதற்கு வழிகாட்டுகின்றது. நடுத்தர ஆண்டு காலப்பகுதியில் இத்துறை மீதான முதலீடுகள் பெரும்பாலும் குடிநீர் மற்றும் துப்பரவு ஏற்பாட்டு வசதிகளின் கிடைப்பனவில் காணப்படும் பிராந்திய ஏற்றத்தாழ்வுகளை குறைப்பதற்காகவே செய்யப்பட்டன.

அதே நேரம், இத்துறைக்கான இவ்வருடத்திற்கானதும் நடுத்தர ஆண்டுக் காலப்பகுதிக்கானதுமான முதலீட்டு முன்னுரிமையானது பிராந்திய ரீதியாக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு அதிகூடிய சிறுநீரக பாதிப்பு நோய் காணப்படும் பிரதேசங்களுக்கு சுத்தமான குடிநீரைப் பெற்றுக் கொடுப்பதற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும். மேலும், மிகத்தூர இடங்களில் காணப்படும் கிராமங்களுக்கு அவசியமான குடிநீரைப் பெற்றுக் கொடுப்பதற்காக கிராமிய நீர் விநியோகத் திட்டங்கள் சமூக அடிப்படை நிறுவனங்களின் உதவியுடன் அமுல்படுத்தப்படும். இதற்காக சமூக அடிப்படையிலான குடிநீர் வழங்கல் திணைக்களமானது மேலும் உறுதி செய்யப்பட்டு சமூக அடிப்படையிலான குடிநீர் விநியோக திட்டங்களின் நிலைபேறான முகாமை மற்றும் செயலாற்றுகை உறுதி செய்யப்படும்.

**தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் நீர்வழங்கல் துறையினால் 2017 ஆம் ஆண்டு பூரணப்படுத்தப்பட்ட செயற்பாடுகள்**

- 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 07 கருத்திட்ட முன்மொழிவுகள் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சிலிருந்து கிடைக்கப்பெற்றன. அவை மதிப்பீடு செய்யப்பட்டு தேசிய வரவு செலவுத்திட்டம் மற்றும் வெளிநாட்டு வளத் திணைக்களம் ஆகியவற்றிற்கு சமர்ப்பிக்கப்பட்டன.
- உரிய நிரல் அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட 05 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அவதானிப்புக்கள் வழங்கப்பட்டன.
- 07 Aide Memoires அபிவிருத்தித் திட்டங்களுக்கான கருத்துகளை தயாரித்து வெளிநாட்டு வள திணைக்களத்திற்கு வழங்கியமை.
- முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள், கலந்துரையாடல்கள் மற்றும் வெளிநாட்டு பணிக் கூட்டங்கள் உள்ளடங்கலாக சுமார் 24 கூட்டங்களில் கலந்து கொண்டமை.
- கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டு துறைசார் அபிவிருத்தித் திட்டங்களிலுள்ள பிரச்சினைகள் ஆராயப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.
- துறைசார் கருத்திட்ட இருப்பு தயாரித்தமை.

**சுற்றாடல் முகாமைத்துவம்**

இத் துறையின் தேசிய கொள்கையானது பேரழிவின் மூலம் ஏற்படலாம் என எதிர்பார்க்கக்கூடிய ஆபத்துக்களையும் மக்கள், சொத்துக்கள் மற்றும் பொருளாதாரம் என்பவற்றில் ஏற்படும் தாக்கங்களையும் குறைப்பதன் மூலம் சுற்றாடலின் தரம் மற்றும் இலங்கையின் பாதுகாப்பு என்பவற்றினை உறுதிப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கும் போது தேவையான அளவு முதலீட்டுடன் வலுவான பொருளாதார அபிவிருத்திக்கு வசதி அளிப்பதுடன் நிலைதகு அபிவிருத்தியினை நோக்கிச் செல்வது ஆகும்.

வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கும் சனத்தொகையுடன் உணவு, நீர், சக்தி, நிலம் மற்றும் ஏனைய இயற்கை வளங்கள் என்பவற்றிற்கான கேள்வி அதிகரிப்புடன், உலகமானது பசுமையான சுத்தமான மற்றும் நெகிழ்வுத் தன்மையுள்ள அபிவிருத்தியுடனான இலக்கினை அடைவதில் பாரிய சவாலினை எதிர்நோக்குகின்றது. மாறி வரும் காலநிலை மாற்றங்கள் மேலும் சுற்றாடல் சீரழிவிற்கு வழிவகுப்பதுடன் இதன் விளைவாக விசேட சவால் தொகுதியும் முன்வைக்கப்படுகின்றது. அதிகரித்துக் கொண்டிருக்கும் காலநிலை மாற்றங்களின் தாக்கத்தினால் நிலைதகு அபிவிருத்தியினை சுருக்கமடைய வழிவகுத்தல், வறுமையை வெளிப்படுத்தும் காலப்பகுதி குறைக்கப்படும், மற்றும் சுத்தத்தை முன்னோக்கி நகர்த்தும் தேவை, மிகவும் திறமையான சமமான வளர்ச்சியினைக் கொண்டுள்ள தன்மை ஆகியன காணப்படும். எனவே,

சுற்றாடல் துறையானது பொருளாதார வளர்ச்சியின் திருப்புமுனையாகவும் பொருளாதார விஞ்ஞானத்தின் வளர்ந்து வரும் பகுதியாகவும் கருதப்படமுடியும்.

சுற்றாடல் துறையானது குறைந்தளவு காபன், சுத்தமான மற்றும் பசுமையான சூழல், இழிவளவாக்கப்பட்ட மாசடைதல், சிறந்த உயிர் பல்வகைத்தன்மையும் சுற்றுச்சூழல் சேவைகளும், சூழலில் ஏற்படும் ஆபத்தினைக் குறைத்தல், திறமையானதும் நிலைதகு வள நுகர்வுடனான முன்னேற்றமான மனித நல்வாழ்வு, சமூக சமத்துவம் மற்றும் இயற்கை அனர்த்தங்களினால் ஏற்படும் தாக்கங்களைக் குறைத்தல் ஆகியவற்றினை அடைந்து கொள்வதினைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

சூழல் மாசடைவதனைக் கட்டுப்படுத்துதல், வனப்பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி, நிலைதகு காணி முகாமைத்துவம், வனவிலங்கு - மனித சகவாழ்வு, உயிர்வள பாதுகாப்பு மற்றும் நிறுவன மீள்கட்டமைப்பு மற்றும் ஊக்குவிப்பு ஆகியன சூழல் - நன்மைகளை ஏற்படுத்துவதற்காக அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் சுற்றாடல் துறையின் கீழ் முக்கிய கொள்கைப் போக்குகளாக பின்பற்றப்படும்.

**சுற்றாடல் துறையின் பிரதான இலக்குகள் கீழே காட்டப்பட்டுள்ளன**

- பொருத்தமான கழிவகற்றல் முறைமைகளை உருவாக்கி 2018ஆம் ஆண்டின்போது திண்மக் கழிவு அகற்றல் பிரச்சினை அற்ற நாடாக இலங்கையை உருவாக்குதல்.

- 2018 ஆம் ஆண்டின் போது நாட்டின் முழு கடற்கரையையும் அசுத்தமற்ற பிரதேசமாக மாற்றியமைத்தல்.

- தற்போதுள்ள 29 சத வீத வன வளப் பிரதேசத்தை 2018ஆம் ஆண்டின் போது 32 சத வீதமாக அதிகரித்தல். இதற்காக 60,000 ஹெக்டயர் காடுகளை மீள் நடுகை செய்தல்.

- 2018 ஆம் ஆண்டாகும் போது நாட்டிற்கு இயற்கையை ரசிக்கும் சூழல் நட்பான 300,000 உல்லாசப் பயணிகளை கவர்ந்து ரூபா 250 மில்லியன் வருமானத்தை உழைத்தல்.

- 2025 ஆம் ஆண்டின் போது 3050 கி.மீற்றர் மின்சார வேலியை அமைத்து யானை மனித மோதலை இல்லாதொழித்தல்.

- 2020 ஆம் ஆண்டின் போது நாட்டின் மொத்த வாகனத் தொகையில் மின்சாரத்தினால் இயங்கும் வாகனங்களின் எண்ணிக்கையை 25 சத விதமாக அதிகரித்தல்.

- 2020 ஆம் ஆண்டின் போது தேசிய மின் உற்பத்தியில் மீள் புதுப்பிக்கக்கூடிய மின்சாரத்தின் பங்கினை 20 சத வீதமாக அதிகரித்தல்.

- 2005 – 2015 காலப்பகுதியுடன் ஒப்பிட்டு 2030ஆம் ஆண்டின் போது இயற்கை அனர்த்தங்களினால் இடம்பெறும் மரணங்களின் எண்ணிக்கையை குறிப்பிடும் படியான எண்ணிக்கையினால் குறைத்தல்.

- தற்போதுள்ள 70 சத வீத வானிலை முன் எதிர்வுகூறல் உண்மைத் தன்மையினை 2018ஆம் ஆண்டின் போது 72 சத வீதமாக அதிகரித்தல்.

- மண் சரிவுகளினால் ஏற்படும் உயிர் இழப்புக்களை 2018 ஆம் ஆண்டின் போது குறைத்துக் கொள்ளல்.

- 2018 ஆம் ஆண்டின் போது வெள்ளத்தினால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கையை 50 சத வீதத்தினால் குறைத்தல்.

**விசேட நிகழ்வுகள்**

- உரிய நிரல் அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 19 கருத்திட்ட முன் மொழிவுகள் மதிப்பிடப்பட்டன.

- உரிய நிரல் அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 21 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அவதானிப்புக்கள் வழங்கப்பட்டன.

- உரிய நிரல் அமைச்சுக்களும் நிறுவனங்களும் கொள்கைகள் மற்றும் உபாயங்கள் தயாரிப்பதற்குத் தேவையான தொழில் நுட்ப உதவிகள் வழங்கப்பட்டன.

## 3.6 சுகாதாரம் மற்றும் சுதேச வைத்தியம், விளையாட்டு மற்றும் கலாசாரம்

### சுகாதாரம்

ஆரோக்கியமான தேசம் ஒன்றானது முக்கியமாக நாட்டின் ஈர்க்கக்கூடிய பொருளாதார வளர்ச்சியினை பூர்த்தி செய்யக்கூடிய ஒன்றாகும். எனவே, சுகாதாரத்துறையின் அரச கொள்கை ஆனது தேசிய சுகாதார சேவையை மேம்படுத்தத் தேவையான நிறுவன மற்றும் கொள்கை மறு சீரமைப்புடன் அதிகரிக்கப்பட்ட முதலீடுகளைச் சுகாதாரத்துறைக்கு முதலிடுவதுடன் ஆரோக்கியமான தேசத்தினை உருவாக்குவதனை இலக்காகக் கொண்டுள்ளது. தேசிய

திட்டமிடல் திணைக்களமானது 2017 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் சுகாதாரத்துறைக்கான கீழ்வரும் பணிகளை நிறைவேற்றியுள்ளது.

- 34 மதிப்பிடப்பட்ட கருத்திட்ட முன்மொழிவுகள் செயற்படுத்துவதற்காக சிபார்சு செய்யப்பட்டன. அவதானிப்புகள் தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம், வெளிநாட்டு வளத் திணைக்களம் மற்றும் உரிய நிரல் நிறுவனங்களிற்கு சமர்ப்பிக்கப்பட்டன.

- சுகாதாரம், போசாக்கு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட 13 அமைச்சரவை விஞ்ஞாபனங்களிற்கு அமைச்சரவை அவதானிப்புகள் தயாரிக்கப்பட்டன.

- மூன்றாம் சுகாதாரத்துறை அபிவிருத்தி கருத்திட்டம் (சுகாதாரத்துறை வலுவூட்டல் கருத்திட்டம்) மற்றும் ஆரம்ப நிலை சுகாதாரப் பராமரிப்பு மறுசீரமைப்பு கருத்திட்டத்திற்கான சுகாதார முறைமை விரிவாக்கம் ஆகியவற்றிற்கான செயலமர்வுகளில் பங்குபற்றி மேற்படி கருத் திட்டங்கள் தயாரிப்பதற்கு தேவையான உள்ளீடுகள் வழங்கப்பட்டன.

- சுகாதாரத் துறைக்கான “அனர்த்தத்திற்குப் பின்னரான மீளமைப்பு மற்றும் மீள் நிர்மாணத்திற்கான திட்டம்” தயாரிக்கப்பட்டது.

- தென் பிராந்தியத்தில் சுகாதாரத்துறைக்குரிய தேவைகள் ஆராயப்பட்டு தென் பிராந்திய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கான சுகாதாரத்துறைக்குரியகுறிப்பு தயாரிக்கப்பட்டது.

- வெளிநாட்டு நிதி உதவித்திட்டங்களை செயற்படுத்துவதற்கு உரிய நிதி உதவிகளை பெற்றுக்கொள்வதற்காக பல கூட்டங்கள் நடாத்தப்பட்டு உலக சுகாதார நிறுவனம், உலக வங்கி, ADB, JICA ஆகியவற்றின் அதிகாரிகளுக்கு அவதானிப்புக்கள் மற்றும் உள்ளீடுகள் வழங்கப்பட்டன.

- சுகாதாரத்துறைக்குரிய வழிகாட்டல் குழுக் கூட்டங்களிலும் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களிலும் பங்கு பற்றியமை.

## விளையாட்டுத்துறை

விளையாட்டுத்துறை மூலம் நாட்டின் ஒட்டு மொத்த சனத்தொகையினதும் உடற்பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொள்வதன் ஊடாக தற்போது இந்நாட்டின் பிரதான சுகாதார பிரச்சினையொன்றாக உள்ளதொற்றா நோயைக் குறைப்பதன் ஊடாக அரசாங்கம் அதற்காக ஏற்கும் செலவினைக் குறைப்பதும் இந்நாட்டின் சமூகத்தினதும் பண்பாட்டினதும் கட்டாயத் துறையொன்றாக இத்துறையினை நடாத்திச் செல்லுதல் மற்றும் ஆரோக்கியமான தேசத்தினரை உருவாக்கி அவர்களைப் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செலுத்த வைப்பதும்,

மக்களுக்குத் தொடர்ச்சியாக உடல் ரீதியாக செயற்படுவதற்கான ஊக்குவிப்பொன்றாக இத்துறையை செயற்படுத்துவதே அரசாங்கத்தின் இலக்குகளாகக் காணப்படுகின்றது. இவ்வகையில் அரசாங்கம் 2016 ஆம் ஆண்டிலிருந்து ''விளையாட்டு மற்றும் உடல்நல மேம்பாட்டு தேசிய வாரம்'' வருடத்தில் வாரம் ஒன்றினைப் பிரகடனப்படுத்தி இருந்தது. இவ்வாறே 2017 ஆம் ஆண்டு மேற்படி வாரமானது மாசி மாதம் ஆறாம் திகதி முதல் பன்னிரண்டாம் திகதி வரையிலான காலப்பகுதியில் பிரகடனப் படுத்தப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக சகல பாடசாலை மாணவர்களையும் விளையாட்டில் ஈடுபடுத்தப்பட வேண்டியதன் அவசியமானது அரசாங்கத்தினால் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளதுடன் பாடசாலை மாணவர்களின் விளையாட்டுத் திறமைகளைச் சிறு வயதிலேயே இனங்கண்டு அவர்களின் திறமைகளையும் மனப்பாங்கையும் தொடர்ச்சியாக விருத்தி செய்வதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்றினை நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிட்டுள்ளது. அவசியமான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதனை இலக்காகக் கொண்டு அரசாங்கத்தினால் குறிப்பிடத்தக்க அளவிலான முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.2017 ஆம் ஆண்டில் கீழ்வரும் பணிகள் தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் நிறைவேற்றப்பட்டுள்ளன.

- 16 கருத்திட்ட முன் மொழிவுகள் மதிப்பிடப்பட்டதுடன் செயற்படுத்துவதற்காக தேவையான நிதியினைப் பெறுவதற்கான பரிந்துரைகள் தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளத் திணைக்களம் ஆகியவற்றிற்குச் சமர்ப்பிக்கப்பட்டன.

- விளையாட்டுத்துறை அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட 02 அமைச்சரவை விஞ்ஞாபனங்களிற்கு அமைச்சரவை அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

- 2017 ஆம் ஆண்டு வைகாசி மாதம் இடம்பெற்ற மண் சரிவு மற்றும் வெள்ளம் ஆகிய அனர்த்தத்திற்குப் பின்னரான மீளமைப்பு மற்றும் மீள் நிர்மாணத்திற்கான திட்டத்திற்குரிய விளையாட்டுத் துறைக்கான குறிப்பு தரவுகள் சேகரிக்கப்பட்டு தயாரிக்கப்பட்டது.

- விளையாட்டுத்துறை அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட கருத்திட்ட முன் மொழிவுகளில் காணப்பட்ட சில பிரச்சினைகளை தீர்ப்பதற்கு விளையாட்டுத்துறை அமைச்சுடனும் மற்றைய உரிய நிறுவனங்களுடனும் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

